

# கைது


## செய்யப்படுவதில் உள்ள உரிமைகள

Human Rights Commission of the Maldives
National Preventive Mechanism

## 1. எந்தெந்த சூழல்களில் ஒருவர் கைது செய்யப் படலாம்?

இந்திய அரசியல் சட்டம்: எண் 46

- A person can only be arrest if:



-கைது செய்யும் அதிகாரி குற்றம் இழைக்கபடுவதை கண்ணெதிரே காணும் போது

-ஒரு நபர் குற்றம் இழைத்திருப்பார் என்பதை அனுமானிக்க போதுமான, நம்பத் தகுந்த ஆதாரங்கள் இருக்கும் போது

-ஒருவர் குற்றம் செய்யப் போகிறார் என நிச்சயமாய் தெரியும் போது

-அல்லது நீதி மன்றம் கைது செய்வதற்கான ஆணை-யை பிறப்பத்திருக்கும் தருணத்தில்

## 2. சட்டத்திற்கு புறம்பான கைது அல்லது காவலில் வைப்பது என்றால் என்ன?

### இந்திய அரசியல் சட்டம்: எண் 45



- அனைவருக்கும் சட்டரீதியாக அன்றி, மற்ற அதிகாரங்களால் கைது செய்யப்படாமலிருக்கவும், காவலில் வைக்கப்படாமலிருக்கவும், சிறையில் அடைக்கப்படாமலிருக்கவும் உரிமை உண்டு.


## 3. ஒப்பந்தத்தை முழுதாக நிறைவேற்றவில்லை என்பதற்காக ஒருவரைக் கைது செய்ய முடியுமா?

### இந்திய அரசியல் சட்டம்: எண் 55

- ஒப்பந்தத்தை நிறைவேற்றாத காரணத்திற்காக யாரும் கைது செய்யப்பட கூடாது.

## 4. ஒருவர் மனிதத் தன்மையற்ற முறையில் நடத்தப்படலாமா?நடத்தப்படலாமா?

### இந்திய அரசியல் சட்டம்: எண் 54



- எவர் ஒருவரும் கொடுமையான, மனித்தன்மையற்ற, மனித மாண்பை குலைக்கும் முறையில் நடத்தப்படவோ, தண்டனைகள் வழங்கப்படவோ, சித்திரவதைகள் செய்யப்படவோ கூடாது.

## 5. நம்மை கைது செய்யும் நபருக்கு நம்மை சோதனையிடவும், நமது உடமைகளை கைப்பற்றவும் அதிகாரம் உண்டா?

### இந்திய அரசியல் சட்டம்: எண் 47



- சரியான காரணமின்றி ஒருவரை சோதனையிடவோ, அவரது உடமைகளை கைப்பற்றவோ கூடாது
- ஒருவரின் உயிருக்கோ, உடமைகளுக்கோ சேதம் ஏற்பட போகிறது அல்லது சோதனையிட நீதிமன்றம் ஆணை பிறப்பித்திருக்கிறது என்ற சூழலைத் தவிர, மற்ற எந்த காரணத்திற்காகவும், வீட்டில் வசிப்பவர்களின் அனுமதியின்றி அவர்கள் வசிக்கும் இல்லத்தை சோதனையிடவோ, அவர்களது பொருள்களைக் கைப்பற்றவோ யாருக்கும் அதிகாரம் கிடையாது.

## 6. நான் கைது செய்யப்படும் அல்லது காவலில் வைக்கப்படும் தருணங்களில் எனக்கிருக்கும் உரிமைகள் என்ன?

### இந்திய அரசியல் சட்டம்: எண் 48



- கைது செய்யப்படுவதற்கான காரணம் வாய்மொழியாக உடனே தெரிவிக்கப்பட வேண்டும்

- கைது அல்லது காவலில் வைக்கப்படுவதற்கான காரணம் 24 மணி நேரத்திற்குள் எழுத்து வடிவில் தெரிவிக்கப்பட வேண்டும்.

- கைது செய்யப்பட்டவர் தனக்ககென வழக்கறிஞர் வைத்துக் கொள்ள அவருக்கு உரிமை இருப்பதை அவருக்கு தெரியப்படுத்த வேண்டும்

- கால தாமதமின்றி சட்ட ஆலோசனை பெறவும், அந்த வழக்கு முடியும் வரை தொடர்ந்து சட்ட உதவி பெறவும் உரிமை உண்டு.

- தனது அடையாளத்தை வெளிப்படுத்துவதை தவிர வேறு எதற்கும் அமைதி காக்க உரிமை இருக்கிறது. அப்படி ஒரு உரிமை இருப்பது அவருக்கு தெரிவிக்கப்பட வேண்டிய உரிமையும் இருக்கிறது.

- கைது செய்த 24 மணி நேரத்திற்குள் குற்றம் சுமத்தப்பட்டவரை, அவரை தண்டிப்பதற்கோ, விடுதலை செய்வதற்கோ அதிகாரம் உள்ள முறை-றயான நீதிபதியின் முன் ஆஜர் படுத்த வேண்டும்.

## காவல் துறையினரின் அதிகாரத்தைப் பற்றிய சட்ட வரம்புகள்: எண் 18

- கைது செய்யப்படும் போது தெரிவிக்கப்பட வேண்டியவைகளில் கீழ் கண்டதும் அடங்கும்:
- கைது செய்யபட்டவரிடம் அவர் கொண்டுச் செல்லப்பட போகும் காவல் நிலையத்தின் பெயரை கைது செய்யும் நேரத்திலேயே தெரிவிக்க வேண்டும்.

## 7. என்னை கைது செய்யும் காவலரின் அடையாளத்தை அறிந்துக் கொள்ளும் உரிமை எனக்கு உண்டா?

காவல் துறையினரின் அதிகாரத்தைப் பற்றிய சட்ட வரம்புகள்: எண் 18



- கைது செய்யும் காவலரின் பெயர், அவர் வகிக்கும் பதவி மற்றும் அவரது பணி எண் முதலியவை கைது செய்யபட்டவருக்கு உடனடியாகத் தெரிவிக்கப்பட வேண்டும்.

- கைது செய்யப்படும் நேரத்தில், கைது செய்யபடுபவருக்கு அவர் கைதுசெய்யப்படுவதற்கான காரணம் தெரிவிக்கப்பட வேண்டும்.

## 8. நான் போலிஸ் காவலில் வைக்கப்பட்டிருக்கும் போது என்னிடமிருந்து என்னென்ன தரவுகள் பெறப்படும்?

**காவலர் பொது வரைமுறைகள்: பிரிவு 4, எண் 28**



- கைது செய்யப்பட்டவரைப் பற்றிய அடிப்படை தரவுகள்
- கைரேகை
- புகைப்படம்
- உயரம் மற்றும் எடை பார்க்கப்படவேண்டும்
- வெளிக்காயங்கள் ஏதுமிருந்தால் காவல் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பேடுமகு றித்துக் கொள்ளப்படும்.

# 9. காவலில் வைக்கப்படும் நபர் எப்படி நடத்தப்பட வேண்டும்?

**இந்திய அரசியல் சட்டம் எண்: 57**



- குற்றம் சுமத்தப்பட்டவரின மாண்புக்கு சட்டத்திற்கு உட்பட்ட வகையில் மதிப்பளித்து அவரை மன- ிதத் தன்மையுடன் நடத்த வேண்டும்.

- ஒரு வழக்குக்கு எந்த அளவுக்கு தேவப்படுகிறேதா அந்த அளவுக்கு மட்டும்தான் கைது செய்யப்பட்டவரின் சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.



## 10. ஒருவர் பெரிய குற்றத்திற்காக கைது செய்யப்பட்டால் அவருக்கிருக்கும் உரிமைகள் என்ன?

**இந்திய அரசியல் சட்டம்: எண் 51**



- குற்றம் சுமத்தப்பட்டவரிடம் அவர் என்ன குற்றத்திற்காக கைது செய்யப்படுகிறார் என்பதை அவருக்கு தெரிந்த மொழியிலேயே தாமதமின்றி தெரிவிக்க வேண்டும்
- அவரை வாக்குமூலம் கொடுக்க கட்டாயப்படுத்தக் கூடாது
- குற்றம் சுமத்தப்பட்டவர் காது கேளாதவர் அல்லது வாய் பேச முடியாதவராக இருந்தாலோ அல்லது வழக்கு விசாரணை நடத்தப்படும் மொழி-யை அறியாதவராக இருந்தாலோ அதை அவருக்கு புரியம் வைை-

கயில் விளக்கிச் சொல்ல ஒரு நபரை எற்படுத்தி தருவது அரசின் பொறுப்பாகும்.

- குற்றம் சுமத்தப்பட்வர் தனது தரப்பு சாட்சிகளைத் தயார் செய்வதற்கும், தனது வழக்கறிஞரைத் தொடர்ப கொள்வதற்கும் தேவையான நேரத்தையும் வசதிகளையும் அரசு எற்படுத்தி தர வேண்டும்.
- குற்றம் சுமத்தப்பட்டவர் தனக்க எதிராக சாட்சியம் கூறுபவர்களிடம் எதிர்க் கேள்வி கேட்கும் உரிமை உண்டு.
- சந்தேகத்திற்கு இடமில்லாமல் குற்றம் நிருபிக்கப்படும் வரை குற்றம் சுமத்தப்பட்டவரை குற்றமற்றவர் என கருதப்படும் உரிமை உண்டு.

## 11. நான் கைது செய்யபட்டாலோ காவலில் வைக்கபட்டாலோ சட்ட ஆலோசனை பெற உரிமை உண்டா?

### இந்திய அரசியல் சட்டம் எண் 53

- எல்லாருக்கும் சட்ட ஆலோசனை பெற உரிமை உண்டு
- குற்றத்தின் தன்மை அதிகமாக இருக்கும் போது, குற்றம் சுமத்தப்பட்வர் தனக்கனெ ஒரு வழக்கறிஞரை ஏற்பாடு செய்துக் கொள்ள இயலாத நிலையில் இருக்கும் போது அரசே அவருக்கு ஒரு வழக்கறிஞரை ஏற்பாடு செய்து தர வேண்டும்.



- குற்றம் சாட்டப்பட்டவரை விசாரிப்பதற்கு முன், அவரை எந்த இடத்தில் எந்த நேரத்தில் விசாரிக்கப் போகிறார்கள் என்பதை அவருடைய வழக்கறிஞருக்கு விசாரிப்பதற்கு 18 மணி நேரத்திற்கு முன்பாக தெரியப்படுத்த வேண்டும்.

- ஆனால் குற்றத்தின் கணத்தைப் பொறுத்து விசாரிப்பதற்கு 10 மணி நேரத்திற்கு முன்னதாகவும் குற்றம் சுமத்தப்பட்வரின் வழக்கறிஞருக்கு தெரிவிக்கப்படலாம்

## 12. ஒருவர் செய்த செயல் அல்லது செய்யாமல் விட்ட செயல் சட்டப்படி குற்றம் ஆகாது என்கிற போது அவர் குற்றவாளியாக கருதப்படலாமா?

### இந்திய அரசியல் சட்டம்: எண் 59

- ஒருவர் செய்த செயல் இந்திய அரசியல் சட்டத்தின்படியோ, அல்லது இஸ்லாம் ஷரியத் படியோ தவறில்லை என்று குற்றம் சுமத்தப்பட்ட சமயத்தில் இருந்தால் அவர் குற்றவாளியாக கருதப்பட முடியாது

- ஒரு குற்றத்திற்கு அந்த குற்றம் செய்யப்பட்ட காலத்தில் இருந்த தண்டனை அளவுக்கு மேலான தண்டனை அளிக்க கூடாது.

- ஒருவர் குற்றம் செய்ததற்கும், தண்டனை பெறும் காலத்திற்கும் இடையில் அந்த குற்றத்திற்கான தண்டைனயின் அளவு குறைக்கபட்டடிருந்தால் குற்றம் செய்தவர் அந்த குறைந்த அளவு தண்டனையை பெறுவதற்கு தகுதி உள்ளவராகிறார்.

*For more Inbformation:*

*Human Rights Commission of the Maldives*

*Ma.Uthuru Vehi, 5th Floor, Keneree Magu, Male'*

*Tel: 3336539, 3329245, 3344977, 3304013*

*Fax: 3338658*

*Toll free Number: 1424*

*Email: info@hrcm.org.mv*

*Website: www.hrcm.org.mv*